### மனித உரிமைக்கும், அரசியலமைப்புக்கும், கூட்டாட்சி முறைக்கும், சிறுபான்மையினருக்கும் எதிரான

# ‘வக்ஃபு’ வாரிய சட்டத் திருத்த மசோதாவை கைவிடுக!

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆணித்தரமான பேச்சு!

புதுடெல்லி, ஆக. 9 –

**நாடாளுமன்ற மக்களவையில் நேற்று, ‘வக்ஃபு’ வாரிய சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவரும் – கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், “இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்ற கனவுக்கு எதிராக இந்த மசோதா இருக்கிறது” என்றும் “மனித உரிமைக்கும் அரசியமைப்புக்கும் கூட்டாட்சி முறைக்கும் சிறுபான்மையின ருக்கும் எதிரான ‘வக்ஃபு’ வாரிய சட்டத் திருத்த மசோதாவை கைவிடவேண்டும்!” என்றும் குறிப்பிட்டார்.**



மக்களவையில் – நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: –

இது மிகவும் தூக்ககரமான நாளாகும், இந்த நாடாளுமன்றத்தில் இது மசோதா வேதனை அளிக்கிறது. இந்த நாடாளுமன்றத்திற்கு நான் புதிதாக வந்தபோது, உறுப்பினர்கள் பலரும் கையில் அரசியல் அமைப்பின் ஒரு நகலைக் கொண்டுவந்தார்கள். அதைக் காப்பாற்ற, பாதுகாக்கப் பட வேண்டும் என்ற எண்ணத்தில், அதுதான் மிகவும் ஆதிக்கம் பெற்றது.

ஆனால், இந்த ஒன்றிய அரசு வெளிப்படையாக அரசிலைமைப்புக்கு எதிராக நடக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது அரசியல் அமைப்புக்கு மட்டுமல்லாமல், கூட்டாட்சிக்கும் எதிராக இருக்கிறது, மதம் சார்ந்த சிறுபான்மைக்கு எதிராக இருக்கிறது, மனிதத் தன்மைக்கு எதிராக இருக்கிறது, இது நீதிக்கு எதிராக இருக்கிறது, ஒவ்வொரு விதத்திலும் இது நீதியை எதிர்க்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 25 & 26 இருக்கின்றன, அவை என்ன கூறுகிறது என்றால், ஒவ்வொருவருக்கும் எந்த மதத்தையும் பின்பற்ற உரிமை இருக்கிறது, “மதரீதியான விவகாரங்களை அவர்களே நிர்வாகம் செய்து கொள்ளலாம்” என்ற உரிமை கொடுக்கிறது.

வக்பு வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாதவர் உறுப்பினராக முடியும். இஸ்லாமியரோ, கிறிஸ்தவரோ ஒரு இந்து கோவிலில் உள்ள வாரியத்தில் உறுப்பினராக முடியுமா? அதை நீங்கள் அனுமதிப்பீர்களா? சீக்கியர்களுக்கும் இதே சட்டம்தான். மற்றவர்கள் தலையிட நீங்கள் அனுமதிப்பீர்களா?

அப்படி என்றால் ஒரு குறிப்பிட்ட மதத்தில் நம்பிக்கை இல்லாதவருக்கு, அந்த மதம் சார்ந்த முடிவை எடுக்கும் உரிமையை எப்படி வழங்கலாம். இது அநீதியாக உங்களுக்குத் தோன்றவில்லையா? நீதிக்கு எதிரானதாக உங்களுக்குத் தோன்றவில்லையா? இது அரசியலமைப்பின் 30வது பிரிவுக்கு நேரடியாக எதிராக இருக்கிறது.

சிறுபான்மையினர் தங்கள் நிறுவனங்களை நிர்வகித்துக்கொள்ள உரிமையை வழங்குகிறது. இப்போது நீங்கள் அந்த உரிமையை, அந்த முடிவெடுக்கும் உரிமையை ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கிறீர்கள். அந்தச் சொத்து யாருக்குச் சொந்தமானது என்பது குறித்து முடிவெடுக்கும் உரிமையை யார் கையில் கொடுக்கிறீர்கள்?

பல பழைய மசூதிகள் இப்போது ஆபத்தில்தான் இருக்கின்றன. திடீரென்று ஒரு பொதுநல வழக்குப் போடப்பட்டது, அங்கு மக்களும் தொல்லியலாளர்களும் அனுப்பப்பட்டார்கள். முன்புபொரு காலத்தில், அது ஒரு கோவிலாக இருந்தது என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் வெறுப்புப் பிரச்சாரம் அதிகமானது, பிரிவினை அதிகமானது, நாட்டு மக்களிடையே பிரிவினை உண்டானது, இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

உரிமை செய்ய வக்பு வாரியத்திற்கு உரிமை இருக்கிறது. இந்த மசோதா இஸ்லாமியர்களுக்கு, சிறுபான்மையினருக்கு முற்றிலும் எதிரானது. அவர்கள் இந்த நாடு, மதச்சார்பற்ற ஒரு நாடு என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்து நிற்கிறார்கள்.

> **வக்ஃபு வாரிய சட்டத்திருத்த மசோதா மனித உரிமைக்கும், அரசியலமைப்புக்கும், கூட்டாட்சி முறைக்கும் எதிரானது. இஸ்லாமியர் அல்லாதவர்கள் வக்ஃபு வாரியத்தில் உள்ளதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? வக்ஃபு வாரிய மசோதா மத சுதந்திரத்துக்கு எதிரானது. இந்த அரசு அப்பட்டமாக அரசியலமைப்புக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது.**
>
> **இந்த மசோதா அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது மட்டுல்ல, கூட்டாட்சி முறைக்கு எதிரானது; சிறுபான்மையினருக்கு எதிரானது; மனிதருக்கே எதிரானது!**
>
> **இந்த நாடு மதச்சார்பின்மை நாடு. வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு மொழிகள்,வெவ்வேறு இனம், மதங்கள் கொண்ட நாடு. நமது முன்னோர்கள் கட்டமைத்த நாட்டை இந்த மசோதா அழித்துவிடும். மதச்சார்பற்ற நாடான இந்தியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிராக சட்டத்திருத்தம் கொண்டு வருவது தவறு. இச்சட்டத்திருத்த மசோதாவை உடனே கைவிட வேண்டும்.**

இந்த மசோதா என்பது குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு தாக்குகிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிரிவு 14 என்பதை எதிர்த்து இருக்கிறது, ‘சட்டத்தின் முன்பு அனைவரும் சமம்’ என்பதற்கு எதிராக இருக்கிறது.

அந்தச் சொத்து யாருடையது என்பதை பல மொழிகள், பல மதங்கள், பல இனங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு ஒன்றாக வாழலாம் என்று நம்பிக்கையை அவர்கள் இழக்கிறார்கள். இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்ற கனவுக்கு எதிராக இந்த மசோதா இருக்கிறது, நான் இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### விலைவாசி உயர்வைக் கண்டித்து – நாடாளுமன்ற வளாகத்தில்

# ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

### ‘விலைவாசி உயர்வை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்’ என முழக்கம்!

புதுடெல்லி, ஆக. 9 -

நாடு முழுவதும் வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகின்றன. இதனால் ஏழை, எளிய மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

காய்கறிகளின் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என ஒன்றிய அரசுக்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், காய்கறிகளின் விலை உயர்வை தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வெங்காய மாலை அணிந்து ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

காய்கறிகளின் விலை உயர்வை தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க., அரசை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் வெங்காய மாலை அணிந்து நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

---

# விநேஷ் போகத் விவகாரம் குறித்து பேச அனுமதி மறுப்பு!

### மாநிலங்களவையில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் வெளிநடப்பு!

புதுடெல்லி, ஆக. 9 -

ஒலிம்பிக் போட்டியிலிருந்து வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டது குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் மாநிலங்களவையில் இருந்து இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் 2வது நாளாக நேற்றும் வெளிநடப்பு செய்தனர்.

100 கூடுதல் எடை காரணமாக இந்திய வீராங்கனை வினேஷ் போகத் ஒலிம்பிக் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதற்கு இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. வினேஷ் போகத் தகுதிநீக்கத்தில், பல்வேறு தலையீடுகளும், திட்டமிட்ட சதிகளும் இருப்பதாக குற்றம்சாட்டி னர்.

இதுகுறித்து மாநிலங்களவையில் விவாதிக்க அனுமதி தருமாறு, அவைத்தலைவரிடம் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் வலியுறுத்தினர். ஆனால் அவர் அதற்கு அனுமதியளிக்கவில்லை. இதனால் நேற்றைய தினமும் 2வது நாளாக மாநிலங்களவையில் இருந்து இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.

---

### தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்!

# புதுடெல்லியில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

### ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கமிட்டனர்!

புதுடெல்லி, ஆக. 9 -

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதை கண்டித்து டெல்லியில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நடுக்கடலில் மீன்பிடிக்கும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், தாக்குவதும், மீன்பிடி உபகரணங்களை பறித்து செல்வதும் என அராஜகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதைக் கண்டித்து டெல்லி ஜந்தர் மந்தரில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அகில இந்திய காங்கிரஸ் மீனவர் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மீனவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ்குமார், தாரகை கத்பர்ட் உள்ளிட்டோரும் போராட்டத்தில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்காத ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

---

### ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் – ராஜபாளையத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6வது ஆண்டு நினைவு நாள்!

### முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி.ராஜன் தலைமையில் மலரஞ்சலி!

விருதுநகர், ஆக. 9-

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத் தில் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 6வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாநில ஆதிதிராவிடர் நலக்குழுஇணைசெயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ வி.பி..ராஜன் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள் செல்லச்சாமி, சுருளி, செல்வக்கனி, நவீன் குமார், அருண் மற்றும் மகளிர் அணியினர் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மகளிருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை முன்னாள் எம்.எல்.ஏ. வி.பி.ராஜன் வழங்கினார்.

ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் நிகழ்ச்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

---

### கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர்

# முன்னாள் எம்.எல்.ஏ. வி.சி.சந்திரகுமார் தாயார் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 9-

கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் - முன்னாள் எம்.எல்.ஏ., வி.சி.சந்திரகுமாரின் தாயார் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளரும், ஈரோடு கிழக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.சி. சந்திரகுமார் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சொ.சம்பூர்ணம் அம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

ஆளாக்கிய அன்னையை இழந்து வாடும் வி.சி. சந்திரகுமார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் 6வது ஆண்டு நினைவு நாள்!

# சிவகங்கை நகர தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை!

சிவகங்கை, ஆக.9 -

கலைஞர் 6வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, நகர திமுக சார்பில் அண்ணா சிலை முன்பு, டாக்டர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு நகரமன்றத் தலைவர் மற்றும் நகர கழக செயலாளர் சி.எம். துரை ஆனந்த் தலைமையில் மற்றும் மாவட்ட துணை செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து முன்னிலையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அப்போது நகரமன்றத் துணைத் தலைவர் கார்கண்ணன், அவைத் தலைவர் மதார், நகரமன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், வீனஸ் ராமநாதன், ராமதாஸ், அயூப்கான், விஜயகுமார், ராஜபாண்டி, மதியழகன், காந்தி, பிரேம்குமார் மற்றும் வட்டப் பிரதிநிதி கண்மணி முத்துமணி, ஆர்.டி.சேகர், ஏ.சேகர், முருகேசன், முனிராஜ், சேது, காட்டுராஜா, சண்முகம், கணேசன், சு. சரவணன், ராஜா, செல்வதீன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் ஹரிஹரன்,

இலக்கிய அணி அமைப்பாளர் பிரபாகரன், மகளிர் அணி மஞ்சுளா, இராஜேஸ்வரி, திமுக பேச்சாளர் வேங்கை பிரபாகரன், தமிழ் பிரியா, சட்டமன்ற தகவல் தொழில்நுட்ப அணி சதீஷ் குமார், திமுக அணி வழக்கறிஞர் பாஸ்கரன் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள், சார்பு அணிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

---

### ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று

# அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக. 9 -

ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்த அனுமதி அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாவட்ட ஆட்சியர்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பொன்னையா அனுப்பியுள்ள சுற்றறிக்கையில்,

சுதந்திர தினத்தன்று காலை 11 மணியளவில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், கிராம மக்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் இடம், நேரத்தை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய பொருட்கள் குறித்தும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தூய்மையான குடிநீர் விநியோகம், இணைய வழி வரி செலுத்தும் சேவை, இணைய வழி மனைப் பிரிவு மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல், சுய சான்றிதழ் அடிப்படையில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு உடனடி பதிவின் மூலம் அனுமதி வழங்குதல் உள்ளிட்டவை குறித்தும் ஆலோசிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சுயசான்று கட்டிட அனுமதி பெறுவதற்கான செயல் முறைகள், தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல்ஜீவன் இயக்கம் உள்ளிட்டவை தொடர்பாகவும், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், அரசு பொது கட்டடங்கள் அனைத்திலும் குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வது உள்ளிட்டவை குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.